22.09.2025

OS No: 540/2019

வா.சா. 2 திரு. சுப்பிரமணியன் த/பெ பிச்சை.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னுடைய பூர்வீக ஊர் நாமத்தி கிராமம் என்றால் சரிதான். எனக்கும் 1ம் பிரதிவாதி வளர்மதிக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் நியாபகம் இல்லை. எனது திருமணத்திற்கு பின்பு ஏர்வாடி, கீழக்கரை போன்ற கிராமங்களில் நாங்கள் குடும்பம் நடத்தி வந்துள்ளோம் என்றால் கீழக்கரையில் இல்லை ஏர்வாடியில் குடும்பம் நடத்தி வந்துள்ளோம். ஏர்வாடியில் 10, 15 வருடங்கள் குடும்பம் நடத்தி வந்திருப்போமா என்றால் இல்லை 5 வருடங்கள் அங்கு இருந்தோம். எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை ஏர்வாடியில் குடும்பம் நடத்தி வந்தோம் என்றால் நியாபகம் இல்லை. தற்போது நானும் எனது மனைவியும் காளையார்கோவிலில் உள்ள தென்றல் நகரில் வசிக்கிறோம் என்றால் சரிதான். மேற்படி தென்றல் நகரில் சுமாராக எத்தனை வருடங்கள் வசிக்கிறேன் என்றால் 20 வருடங்களாக வசிக்கிறேன். எனது மனைவியான 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்ரைக்கு விவரங்கள் யார் சொன்னது என்றால் நானும் எனது மனைவியான 1ம் பிரதிவாதி சொன்னோம். 1ம் பிரதிவாதிக்கு உடல் நிலை சரியில்லை என்பதை காட்டிட ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் உள்ளது மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தாவா சொத்து சர்வே எண் எனது மாமனார் காளிமுத்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். காளிமுத்து எந்த வருடம் இறந்தார் என்றால் எந்த வருடம் என நியாபகம் இல்லை சுமாராக 20 வருடங்கள் இருக்கும். எத்தனை வாதிகள் சேர்ந்து தாவா வழக்கு போட்டுள்ளார்கள் என்றோ எவ்வளவு விஸ்தீரண அளவிற்கான சொத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்றோ என்னால் சொல்ல முடியுமா என்றால் குறிப்பிட்டு முடியாது. காளிமுத்துவின் தம்பி செங்கொடி எந்த வருடம் இறந்தார் என்றால் வருடம் தெரியாது 15 வருடங்களுக்கு முன்னால் இறந்து விட்டார். செங்கொடி என்ற ஆறுமுகம் ஆள் மாறாட்டம் செய்து

கிரைய பத்திரம் பதிந்துள்ளதாக நான் கூறிய விவரம் எந்த வருடம் எனக்கு தெரிய வந்தது என்றால் 4 வருடத்திற்கு முன்பு தெரிய வந்தது. ஆள் மாறாட்டம் செய்து பத்திரம் போடப்பட்டது குறித்து நானோ எனது மனைவியோ நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ,2 ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் 2, 3 பிரதிவாதிகள் வசம் உள்ளது. 31.05.2011 ம் தேதிய சீர்திருத்த பத்திரம் குறித்து சொல்லப்பட்டதில் மேற்படி ஆவணம் தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எனது மனைவி, 2 மற்றும் 3ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் 20.09.2017 ம் தேதிய கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் கண்ட சர்வே எண் பல்வேறு உட்பிரிவுகள் செய்யப்பட்டு தற்போது பல்வேறு நபர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனது மனைவி உட்பட மற்ற 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொருத்து போர்ஜெரி பத்திரம் போடப்பட்டதாக சொல்லி வாதி வகையாரா காளையார் கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் பிறகு குற்ற எண். 264/2018 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. தாவா சர்வே எண் 1 ஏக்கர் 60 சென்டை பொருத்து கிரையம் கொடுத்த எங்களுக்கு மேற்படி சொத்தில் உரிமை பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல 2, 3 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது. தாவா சொத்தை கிரையம் கொடுத்திட எனது மனைவியான 1ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்பதால் 2, 3 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் உரிமை இல்லை என்றால் சயரில்ல. தாவா சொத்து காளிமுத்தால் பல்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டு அந்த நபர்கள் பட்டா பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. செங்கொடி என்ற ஆறுமுகம் தான் போர்ஜெரியாக கிரையம் பத்திரம் எழுதி கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிராதில் கண்ட சொத்திக்களை வாதிகள் கிரையம் பெற்று இன்றைை தேதி வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.09.22 17:35:53 +0530